# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் இறகுபந்து (பேட்மிண்டன்) விளையாட்டில் சிறந்த வீரர்கள், வீராங்கனைகள் உருவாக்கிட கடலூர் அண்ணா விளையாட்டரங்கில் இறகுபந்து அகாடமி நடப்பு **2017–18** ஆம் ஆண்டிற்கான புதிய 8 வீரர்கள் / 7 வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட உள்ளனர். இந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை தெரிவு செய்ய 10.03.2018 **அன்று காலை 8.00 மணியளவில் அண்ணா உள் விளையாட்ரங்கில் தெரிவு போட்டி நடைபெற உள்ளது.** அச்சமயம் தெரிவு போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் வீரர் / வீராங்கனைகள் 01.01.2002 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும். அதற்கான தகுந்த வயது சான்றிதழ்களுடன் கலந்து கொள்ளலாம் என கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்

2/2

வெளியீடு:- செ.ம.தொ.அ.கடலூர்